# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# வர்த்தமானப் பத்திரிகை

**2014 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 01 ஆம் திகதிய**
**பகுதி II இற்குக் குறைநிரப்பி**

*(2014. 08. 04 ஆம் திகதியன்று வெளியிடப்பட்டது)*


# உள்ளூர் அதிகாரசபைகள் தேர்தல்கள்
# (திருத்தம்)

**(262 ஆம் அத்தியாயமான) உள்ளூர் அதிகாரசபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டமூலம்**

உள்ளூராட்சி, மாகாண சபைகள் அமைச்சர் அவர்களால் பிரசுரிக்கப்படுமாறு பணிக்கப்பட்டது


இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது

கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்

**விலை : ரூபா 3.00** **தபாற் செலவு : ரூபா 5.00**

**சட்டப்பயன் பற்றிய கூற்று**

***வாசகம் 2 :*** *இவ்வாசகம் அப்பிரிவின் (4) உட்பிரிவினை நீக்குவதன் மூலம் (262 ஆம் அத்தியாயமான) உள்ளூர் அதிகாரசபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் 66ஆ என்னும் பிரிவினைத் திருத்துகின்றது என்பதுடன், (252 ஆம் அத்தியாயமான) மாநகர சபைக் கட்டளைச் சட்டம், (255 ஆம் அத்தியாயமான) நகரசபைகள் கட்டளைச் சட்டம் மற்றும் 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, பிரதேச சபைச் சட்டம் என்பவற்றுக்கென செய்யப்பட்ட திருத்தங்களுக்கு விளைவாந்தன்மையுடையதுமாகும் என்பதுடன், அத்தகைய நீக்கத்திற்கான சட்டப்பயனானது விடயத்திற்கேற்ப மாநகரசபை, நகரசபை அல்லது பிரதேச சபைச் சட்டத்திற்கான வரவுசெலவுத் திட்டம் ஒன்றை அல்லது குறைநிரப்பு வரவுசெலவுத் திட்டம் ஒன்றை மீள சமர்ப்பிக்கும்போது 2012 ஆம் ஆண்டின் 22 ஆம் இலக்க, உள்ளூர் அதிகாரசபைகள் தேர்தல்கள் (திருத்தச்) சட்டத்திற்கு முன்னரான மாநகரசபையினால், நகரசபை யினால் அல்லது பிரதேச சபையினால் பின்பற்றப்பட்ட நடவடிக்கைமுறையை மீளக் கடைபிடிப்ப தற்கானதுமாகும்.*

*ச.வ.ஓ. 3 /2014*

### *(262 ஆம் அத்தியாயமான) உள்ளூர் அதிகாரசபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்*

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :-

*சுருக்கப் பெயரும் நடைமுறைக்கு வரும் தேதியும்.*

***1***. இச்சட்டம், 2014 ஆம் ஆண்டின்    ஆம் இலக்க, உள்ளூர் அதிகாரசபைகள் தேர்தல்கள் (திருத்தச்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம் என்பதுடன், வர்த்தமானியில் வெளியிடப்பட்ட கட்டளை மூலம் அமைச்சர் நியமிக்கக்கூடிய வாறான அத்தகைய தேதியன்று நடைமுறைக்கு வருதலும் வேண்டும்.

*(262 ஆம் அத்தியாயமான) உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் 66ஆ என்னும் பிரிவினைத் திருத்துதல்.*

***2***. 2012 ஆம் ஆண்டின் 22 ஆம் இலக்க, சட்டத்தினால் கடைசியாகத் திருத்தப்பட்டவாறான (262 ஆம் அத்தியாயமான) உள்ளூர் அதிகாரசபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் 66ஆ என்னும் பிரிவானது பின்வருமாறு இத்தால் மேலும் திருத்தப்படுகின்றது :-

(1) அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் “ஆணையாளர் இப்பிரிவின் (4) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகளுக்கமைய விடயத்திற்கேற்ப” என்னும் சொற்களுக்குப் பதிலாக, “ஆணையாளர் விடயத்திற்கேற்ப”; என்னும் சொற்களை இடுவதன் மூலமும் ;

(2) அப்பிரிவின் (4) ஆம் உட்பிரிவினை நீக்குவதன் மூலமும்.

*ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.*

***3***. இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

*பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 1,387 : (வெளிநாடு) ரூபா 1,849 : ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்கு முன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், அரசாங்க தகவல் திணைக்களம், இல. 163, கிருலபனை மாவத்தை, பொல்ஹேன்கொடை, கொழும்பு 05 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்*